**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**M.C.O.P.No.87/2023**

**வழக்கு சாட்சி PW.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : டேனியல் என்ற பழனி | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : வேலன் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : அம்பிளிக்கை | வயது | : சுமார் 62 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 05.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுக்கா, அம்பிளிக்கை கிராமம், அம்பிளிக்கை செரியன் நகர் 4/399 ல் குடியிருந்து வரும் லேட்.வேலன் மகன் சுமார் 60 வயதுள்ள டேனியல் (எ) பழனி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சியம்.

இவ்வழக்கில் ஏற்கனவே நான் சாட்சியம் முன்னிலைப்படுத்தி ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

திண்டுக்கல் மாவட்டம், மருத்துவ குழுவிற்கு உடல் பரிசோதனைக்காக சென்றிருந்தேன் என்றால் ? சரிதான். மருத்துவக்குழுவால் சான்று வழங்கியுள்ளார்கள் என்றால் ? சரிதான். இவ்வழக்கில் இயலாமை சான்று திண்டுக்கல் அரசு மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். **<u>கடந்த 16.11.2024ம் தேதியிட்ட மனுதாரர் பெயரில் உள்ள இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1.</u>**

2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் ? சரிதான். நான் கொடுத்த புகாரின் தன்மை படி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். 08.01.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு அம்பிளிக்கை கடை வீதியில் சாமான்கள் வாங்க எங்கள் வீட்டில் இருந்து தாராபுரம் To ஒட்டன்சத்திரம் மெயின்ரோடு, அம்பிளிக்கை வந்து ஓடைப்பட்டி பிரிவில் கிழக்கில் இருந்து மேற்கு பக்கம் ரோட்டை கடக்க நடந்துசென்ற போது தாராபுரம் ஒட்டன்சத்திரம் மெயின் ரோட்டில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த யோகராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தவர் ரோட்டை கடக்க நடத்து சென்ற என் மீது மோதியது என்றால் ? சரிதான். வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வரும் வாகனங்களுக்கு கிழக்கு பக்கம் தான் இடது புறம் என்றால் ? சரிதான். மோட்டார் சைக்கிளும் கிழக்கு ஓரமாக தான் வந்தது என்றால் ? சரிதான். நான் ரோட்டினை பார்த்து குறுக்கே கடந்திருக்கும்பட்சத்தில் விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் ? நான் இரண்டு எட்டுகள் எட்டிவைத்து நின்ற போது இருசக்கர வாகனம் என் மீது மோதிவிட்டது. விபத்தை நான் தான் ஏற்படுத்திக் கொண்டேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. நான் விபத்தை பதிவேட்டு நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். விபத்து பதிவேட்டு நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். அசல் டிஸ்சார்ஜ் சம்மரியை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். மருந்து பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். மருத்துவ டிஸ்சார்ஜ் சம்மரி அசல் தாக்கல் செய்யாத நிலையில் இந்த நகல் டிஸ்சார்ஜ் சம்மரி ஏற்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. நான் எப்போது உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன்

என்றும், எப்போது மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டு வந்தேன் என்பவதற்கு ஆதரவாக எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிசிச்சை பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றாலும், மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட சான்றிதழில் இயலாமையின் தன்மை அதிகப்படியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ?சரியல்ல. நான் விவசாய கூலி வேலை பார்த்து மாதம் ரூ.15,000 சம்பாதிப்பதாக சொல்லியிருப்பது நான் இந்த வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் ?சரியல்ல. எனக்கு 2023ம் ஆண்டே 62 வயது என்றால் ? சரிதான். நான் வயோதியத்தின் காரணமாக எந்த வேலைக்கும் செல்லாமல் வேலைக்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ?சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் எனக்கு எந்தவித இழப்பீடும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.05 17:53:40 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்